**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal procedure)

| | |
|---|---|
| **IN THE COURT OF** | Judicial Magistrate, Nanguneri |
| Calendar<br>Miscellaneous<br>Preliminary register<br>Sessions | CC.No. 190/2017 |
| Deposition Of Witness for | Prosecution PW 3<br>Defense<br>Court |
| Name | திரு. சுவாமிநாதன் |
| Husband Name / Father's Name | |
| Village | |
| Taluk | |
| Religion | Muslim/Christian/Hindu |
| Age | /2024 |

எதிரி ஆஜரில்லை குவிமுச பிரிவு 317 ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 27th day of September 2024.

நான் தற்போது திருநெல்வேலி மருத்துவ கல்லூரி மருத்துவமனை கணக்கு பிரிவில் உதவியாளராக உள்ளேன் . இதற்கு முன்பு தென்காசி மாவட்ட மருத்துவ நலம் இணை இயக்குனராக அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணி செய்தேன். அப்போது கடந்த 19.01.2017 ம் தேதி பொங்கல் முடிந்து நான், அ.சா.1, அ.சா.2 ஆகியோர்கள் மூலைக்கரைபட்டியில் உள்ள மக்கள் நல மருத்துவமனைக்கு முதலமைச்சர் தனிபிரிவில் இருந்து ஜெயராணி என்பவர் மருத்துவ படிப்பு படிக்காமல் மருத்துவம் பார்ப்பதாக கிடைக்க பெற்ற புகாரின் பேரில் மாலை 7.00 மணிக்கு ஆய்வுக்கு சென்றோம்.

அ.சா.1 மருத்துவமனைகககு உள்ளே சென்றார், அப்போது என்னையும் அ.சா.2 யையும் வெளியில் நிற்கும்மாறு சொல்லிவிட்டு சென்றார். சிறிது நேரம் கழித்து கைபேசி மூலமாக உள்ளே அழைத்தார். நானும் அ.சா.2 ம் உள்ளே சென்ற போது அ.சா.1 ஜெயராணியிடம் என்ன படித்துள்ளீர்கள் என்றும், மருத்துவம் படித்ததற்கு சான்று ஆவணங்களையும் கேட்டார். அப்போது ஜெயராணி அவரிடம்

சான்றிதழ் இல்லை என்று தெரிவித்தார். பின்னர் அ.சா.1 அவரிடம் மருத்துவ படிப்பு படிக்காமல் மருத்துவம் பார்ப்பது தவறு என்று தெரிவித்து, போலீசாரிம் தெரிவித்து பின்னர் போலீசார் காவல்நிலையத்திற்கு அழைத்து சென்றார்கள்.

பின்னர் நாங்களும் காவல்நிலையத்திற்கு சென்றோம். மருத்துவமனையில் ஜெயராணி மருத்துவ பணி செய்ததற்கு அங்கு இருந்த மருந்துகளை கைபற்றி காவல்நிலையத்தில் ஒப்படைத்தோம். அ.சா.1 எதிரிக்கு எதிராக புகார் கொடுத்தார். அதன்பிறகு காவல்நிலையத்தில் முதல் தகவல் அறிக்கை பெற்றுவிட்டு சென்றுவிட்டோம். போலீசார் வழக்கு சம்பந்தமான விசாரணை செய்தார்கள்.

குறுக்கு விசாரணை

காவல்நிலையத்தில் இருந்து முதல் தகவல் அறிக்கை பெற்று சென்ற போது சுமார் இரவு 2.00 மணி இருக்கும். மருத்துவமனையில் இருந்து எதிரியை போலீசார் காவல் வாகனத்தில் நிலையம் அழைத்து சென்றார்கள். எதிரி நிலைத்திற்கு சென்று 10 நிமிடத்தில் நாங்கள் சென்றோம். பொதுமக்கள் மருத்துவமனையில் இருந்து கைது செய்ததால் காவல்நிலையத்தில் பொதுமக்கள் நிறைய நபர்கள் கூடி இருந்தார்கள் என்றால் நாங்கள் காவல்நிலையத்தில் இருந்த போது அப்படி ஒன்றும் இல்லை.

நானும், அ.சா.2 ம் கையெழுத்து போட்டு கொடுத்தோம், எத்தனை கையெழுத்து போட்டோம் என்று தற்போது ஞாபகம் இல்லை. புகார் மனுவை நான் தான் எழுதி கொடுத்தேன். அதில் தான் அ.சா.1 கையெழுத்து போட்டு கொடுத்தார். நான் சொன்ன தேதியில், சொன்ன நேரத்தில் ஆய்வுக்கு சென்றதாக சொல்லபடும் இடத்திற்கு செல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. அ.சா.1 என் மேல் அதிகாரி என்பதால் அவர் வேண்டுகோளுக்கு இணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சம்பவ இடத்தில் இருந்து மருந்துகளை கைபற்றி காவல்நிலையத்தில் ஒப்படைததாக தெரிவித்தது பொய் என்று சொன்னால் சரியல்ல.

அ.சா.1 மருத்துவனைக்கு உள்ளே சென்ற பிறகு நானும், அ.சா.2 ம் உள்ளே செல்லும் வரை என்ன நடந்தது என்று நேரடியாக தெரியாது என்றால் சரிதான்.

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal procedure)

| | |
|---|---|
| **IN THE COURT OF** | Judicial Magistrate, Nanguneri |
| Calendar<br>Miscellaneous<br>Preliminary register<br>Sessions | CC.No. 190/2017 |
| Deposition Of Witness for | Prosecution PW 2<br>Defense<br>Court |
| Name | **திரு. முத்துசாமி** |
| Husband Name / Father's Name | |
| Village | |
| Taluk | |
| Religion | Muslim/Christian/Hindu |
| Age | /2024 |

எதிரி ஆஜரில்லை குவிமுச பிரிவு 317 ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 27th day of September 2024.

நான் தற்போது மருத்துவ நலம் இணை இயக்குனராக அலுவலகம் சிவகங்கையில் நிர்வாக அலுவலகராக பணியாற்றி வருகிறேன். இதற்கு முன்பு நான் தென்காசி மாவட்ட மருத்துவ நலம் இணை இயக்குனராக அலுவலகத்தில் அலுவலக கண்காணிப்பாளராக பணி செய்தேன். 21.11.2016 அன்று முதலமைச்சர் தனி பிரிவில் இருந்து ஒரு புகார் வந்தது. அது குறித்து அ.சா.1 னிடம் நான் கேட்டேன். அப்போது அ.சா.1 என்னிடம் அடுத்த மாதம் 17.01.2017 தேதி ஆய்வுக்கு செல்லலாம் என்று என்னிடம் தெரிவித்தார்.

நான் 17.01.2017 அன்று அ.சா.1 மற்றும் எங்கள் அலுவலக இளநிலை உதவியாளர் சுவாமிநாதன் என்பவருடன் புகார் வர பெற்ற மூலைக்கரைபட்டியில் உள்ள மக்கள் நல மருத்துவமனைக்கு ஆய்வுக்கு சென்றோம். நாங்கள் ஆய்வுக்கு சென்ற போது சுமார் 7.00 மணி இருக்கும். அ.சா.1 எங்களை வெளியில் இருக்க சொல்லிவிட்டு அவர் மருத்துவமனைக்கு உள்ளே சென்றார். அப்போது அ.சா.1 உள்ள சென்ற போது மருத்துவர் சீட்டில் ஜெயராணி என்பவர் இருந்தார். அவரிடம் அ.சா.1 காய்ச்சல் என்று தெரிவித்த போது அந்த ஜெயராணி அவரை பரிசோதனை

செய்துள்ளார்.

மேற்படி ஜெயராணி ஊசியில் மருந்துகளை தயார் செய்து ஊசி போட சென்ற போது அ.சா.1 அவரிடம் நீங்கள் என்ன படிப்பு பயின்றுள்ளீர்கள் ஆவணத்தை காட்டுமாறு கேட்டார். உடனடியாக கைபேசி மூலம் எங்கள் இருவரையும் மருத்துவர் அறைக்கு வருமாறு கூறினார். அப்போது அந்த ஜெயராணி மருத்துவ சான்றிதழ் கொடுக்கவில்லை, அங்கு உள்ளது , இங்கு உள்ளது என்ற அலக்களித்து இறுதியாக மாடியில் உள்ளதாக தெரிவித்தார். அ.சா.1 அவரை எடுத்து வருமாறு தெரிவித்தார்.

பின்னர் அந்த ஜெயராணி மருத்துவ சான்றிதழ் எடுத்து வரவில்லை. அ.சா.1 எத்தனை வருடங்களாக மருத்துவர் பணி செய்து வருவதாக கேட்ட போது 10 வருடங்களாக பணி செய்து வருவதாகவும் அவர் 10ம் வகுப்பு படித்துள்ளதாகவும் தெரிவித்தார். பின்னர் அங்கு அறையில் இருந்த மருந்துகளை சோதனை செய்து கைபற்றி எடுத்து காவல்நிலையம் சென்றுவிட்டோம். அங்கு அ.சா.1 ஜெயராணிக்கு எதிராக புகார் கொடுத்தார். போலீசார் விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

அ.சா.1 மருத்துவமனைக்குள்ளே சென்ற போது நானும் சுவாமிநாதனும் எங்கு நின்று கொண்டு இருந்தேன் என்றால் மருத்துவமனை வாசலுக்கு வெளியே நின்று கொண்டு இருந்தேன். நாங்கள் சென்ற வாகனம் மருத்துவமனையில் இருந்து சுமார் 20 அடி தூரம் தள்ளி நிறுத்தி வைத்து இருந்தோம். நாங்கள் சென்றது இனோவா கார். நாங்கள் இரவு நேரத்தில் ஆய்வு செல்ல காரணம் உண்டா என்றால் பணிகளை முடித்து விட்டு ஆய்வுக்கு சென்றோம். எதிரி ஊசியில் மருந்து தயார் செய்து ஊசி போட போனார் என்ற விவரத்தை போலீசார் விசாரணையில் தெரிவித்தேனா என்றால் போலீசார் கேட்கவில்லை. அந்த ஊசியிடன் இருந்த மருந்து கைபற்றி காவல்நிலையத்தில் ஒப்படைக்கபட்டது என்றால் சரிதான்.

அ.சா.1 புகாரை ஆய்வாளரிடம் கொடுத்தார். புகார் எழுதி கொடுக்கபட்டது. எங்களுடன் வந்த சுவாமிநாதன் கைபட எழுதி கொடுத்தார் என்றால் சரிதான். அதில் நானும் அ.சா.1ம் கையெழுத்து போட்டு கொடுத்தோம் என்றால் சரிதான். நாங்கள் காவல்நிலையத்திற்கு சென்று 10 நிமிடம் கழித்து எதிரி காவல்நிலையத்திற்கு வந்தார். நாங்கள் காவல்நிலையத்தில் இருந்து கிளம்பும் போது இரவு 2.00 மணி இருக்கும். போலீசார் எதிரியை சட்டவிரேதமாக காவல்நிலையத்தில் வைத்துள்ளதாக பொதுமக்கள் போராட்டம் செய்தார்கள் என்றால் மக்கள் கூட்டமாக வந்தார்கள்.

போலீசார் பொதுமக்களை சமாதானம் செய்து அனுப்பிய பிறகு நாங்கள் சென்றுவிட்டோம் என்றால் சரிதான். அதன் பிறகு போலீசார் எங்களை விசாரிக்கவில்லை என்றால் சரிதான்.

தனிபிாிவில் இருந்து பெறபட்ட புகார் காவல்நிலையத்தில் கொடுத்துவிட்டோம் என்றால் சரிதான். அ.சா.1 சம்பவ இடத்திற்கு உள்ளே சென்று அழைபேசி மூலம் எங்களை அழைத்து தான் நாங்கள் உள்ளே சென்றோம் என்ற விவரத்தை போலீஸ் விசாரணையில் தெரிவித்தோம் என்றால் சரிதான். நாங்கள் ஆய்வுக்கு சென்ற போது மருத்துவமனையில் யாரும் இல்லை என்றால் சரிதான். எதிரி மருத்துவர் இருக்கையில் உட்கார்ந்து இருந்தார் என்றும், அ.சா.1 க்கு ஊசி போட மருந்து போட தயார் செய்தார் என்ற விவரம் நேரடியாக தொியாது என்றால் சரிதான். நான் நேரடியாக பார்க்கவில்லை.

நான் சொன்ன தேதியில், சொன்ன நேரத்தில் ஆய்வுக்கு சென்றதாக சொல்லபடும் இடத்திற்கு செல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. அ.சா.1 என் மேல் அதிகாரி என்பதால் அவர் வேண்டுகோளுக்கு இணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சம்பவ இடத்தில் இருந்து மருந்துகளை கைபற்றி காவல்நிலையத்தில் ஒப்படைததாக தெரிவித்தது பொய் என்று சொன்னால் சரியல்ல.

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal procedure)

| | |
|---|---|
| **IN THE COURT OF** | Judicial Magistrate, Nanguneri |
| Calendar<br>Miscellaneous<br>Preliminary register<br>Sessions | CC.No. 190/2017 |
| Deposition Of Witness for | Prosecution PW 1<br>Defense<br>Court |
| Name | திரு. டாக்டர். இளங்கோவன் |
| Husband Name / Father's Name | |
| Village | |
| Taluk | |
| Religion | Muslim/Christian/Hindu |
| Age | /2024 |

எதிரி ஆஜரில்லை குவிமுச பிரிவு 317 ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 27th day of September 2024.

நான் தற்போது மருத்துவ நல பணியில் இணை இயக்குனராக பணியாற்றி தற்போது ஓய்வு பெற்றுவிட்டேன். நான் கடந்த 2016 முதல் 2019 வரை ஒருங்கிணைந்த திருநெல்வேலி மாவட்ட மருத்துவ நல பணியில் இணை இயக்குநராக பணிபுரிந்த போது 19.01.2017 அன்று முதலமைச்சர் தனிபிரிவில் கொடுக்கபட்ட 21.11.2016 தேதியிட்ட புகார் மனு எண்.324003 எனது பார்வைக்கு வந்ததை நான் படித்து பார்த்தேன். மேற்படி புகார் மனுவில் மூலைக்கரைபட்டியில் மக்கள் நல மருத்துவ மனை என்ற பெயரில் போலி மருத்துவமனை இயங்கி வருவதாகவும், அதனால் அங்கு உள்ள பொதுமக்கள் பாதிக்கபடுவதாகவும், சிலர் இறந்து போனதாகவும், தெரிவிக்கபட்டு இருந்தது. மேற்படி புகார் மனு மீது மேற்நடவடிக்கைகாக அன்றைய தினம் மாலை சுமார் 7.00 மணிக்கு மேற்படி தனியார் மருத்துவமனையை ஆய்வு செய்ய நான் மற்றும் என்னுடன் அலுவலக கண்காணிப்பாளர் முத்துசாமி மற்றும் அலுவலக இளநிலை உதவியாளர் திரு. சுவாமிநாதன் ஆகியோருடன் சென்றேன்.

நான் மேற்படி மருத்துவமனைக்கு சென்ற போது என்னுடன் வந்த இரண்டு நபர்களை வெளியில் நிற்க வைத்துவிட்டு நான் நோயாளி போல அங்கு மருத்துவர் அறைக்கு சென்றேன். எனக்கு காய்ச்சல் இருப்பதாகவும், அதற்கு வைத்தியம் செய்ய வேண்டும் என்று அங்கு மருத்துவர் நாற்காலியில் அமர்ந்து இருந்த சுமார் 45 வயது மதிக்கதக்க பெண்மணியிடம் தொிவித்தேன். அவர் மருத்துவர் அணியும் ஸ்டேதஸ்கோப் அணிந்து இருந்து என்னை பரிசோதனை செய்வது போல் பாவனை செய்தார். அவர் ஒரு காதில் அதை அணிந்து கொண்டு மற்றொரு காதில் அணியாமல் இருந்தார். அந்த பெண்மணி எனது மார்பு பகுதியிலும், முதுகுபகுதியிலும் ஆய்வு செய்வது போல் பாவணை செய்தார்.

நான் அந்த பெண்மணியிடம் நான் என்னை திருநெல்வேலி இணை இயக்குநராக பணி செய்து வருவதாகவும், அந்த பெண்மணியின் மருத்துவமனையை ஆய்வு செய்ய வந்ததாகவும் தெரிவித்தேன். அந்த பெண்மணியிடம் பெயர் கேட்டதற்கு ஜெயராணி என்று தெரிவித்தார். அந்த பெண்மணியிடம் மருத்துவ சான்றிதழ்களை கேட்ட போது அவர் நான் மருத்துவ படிப்பு படிக்கவில்லை என்றும், அனுபவ ரீதியில் மட்டும் கடந்த 10 வருடங்களாக பணி செய்து வருவதாகவும் தெரிவித்தார்.

அவர் அமர்ந்து இருந்த இருக்கை அருகில் இருந்த அலமாறியில் இருந்த மருந்துகளை ஆய்வு செய்தேன். அதில் சுமார் 10 விதமான அலோபதி மருந்துகள் வைத்து இருந்தார், அவை 1. T. Amlodipine 10 சுமார் எண்ணங்கள், 2.T.Glyburide and metformin, 3. Micronised progesterone, 4. T. progesterone, 5. Inj.Citicoline , 6. T.Mifepristone. 7. T. Misoprostol, 8. Inj.Gentamicin, 9.Inj.Cyanocobalamin, 10. Inj.Chlor Pheniramine ஆகியவை இருந்தது. மேற்படி மருந்துகள் சுமார் ஓவ்வொன்றும் 10 க்கு மேற்பட்டு இருந்தது. மேற்படி மருந்துகளை என்னுடன் வந்த உதவியாளர்கள் முன்னிலையில் கணக்கெடுத்து பதிவு செய்த என்னுடன் வந்தவர்களிடம் கையெழுத்து வாங்கினேன். பின்னர் அந்த பெண்மணி ஜெயராணி என்பவரிடமும் கையெழுத்து வாங்கினேன்.

மேற்படி ஜெயராணி என்பவருடன் கைபற்ற மருந்துகளுடன் மூலைக்கரைபட்டி காவல்நிலைத்திற்கு சென்று புகார் மனு கொடுத்தேன். என்னிடம் காட்டபடும் புகார் மனு நான் அளித்தது தான், அது **அ.சா.ஆ 1.** ஆகும். போலீசார் என்னை வழக்கு சம்பந்தமாக விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

முதலமைச்சர் தனிபிரிவில் கொடுக்கபட்ட மனுவில் பொதுமக்கள் பாதிக்கபடுவதாகவும், சில நபர்கள் இறந்துவிட்டதாக விவரம் உள்ளது என்று போலீஸ் விசாரணையில் தெரிவித்தேனா என்றால் தெரிவித்தேன். மேற்படி தனி பரிவில் கொடுக்கபட்ட புகார் மனுவை போலீசாரிடம் காண்பித்தேன், அதை பார்த்தால் யார் புகார் அளித்தார் என்ற விவரம் தெரியவரும் என்றால் சரிதான். மேற்படி என்னுடன் வந்த நபர்களை அறைக்கு வெளியே நிறுத்துவிட்டு நான் மருத்துவரை பார்க்க தனியாக சென்ற விவரத்தை போலீசாரிடம் புகார் மனுவில் தெரிவித்தேன் என்றால் தெரிவித்தேன்.

நான் மருத்துவ அறைக்கு சென்ற போது அங்கு ஒரு பெண்மணி மருத்துவர் இருக்கையில் அமர்ந்து இருந்தார் என்றும், மருத்துவர் அணியும் ஸ்டேதஸ்கோப் அணிந்து இருந்தார் என்ற விவரத்தை போலீசாரிடம் புகார் மனுவில் தெரிவித்தேன் என்றால் தெரிவித்தேன். மருத்துவர் அணியும் ஸ்டேதஸ்கோப்வை ஒரு காதில் அணிந்து இருந்தார் என்ற விவரத்தை போலீசார் விசாரணையில் தெரிவித்தேன், ஆனால் புகார் மனுவில் தெரிவிக்கவில்லை. மருந்துகளை கணக்கெடுத்து பதிவு செய்து என்னுடன் வந்த நபர்களிடம் கையெழுத்து வாங்கி அந்த பெண்மணியிடம் கையெழுத்து வாங்கிய விவரத்தை போலீஸ் விசாரணையில் தெரிவித்தேன். மேற்படி நான் பதிவு செய்து கையெழுத்து வாங்கிய அத்தாட்சி போலீசாரிடம் ஒப்படைத்தேனா என்று ஞாபகம் இல்லை.

மேற்படி சம்பவ காலத்திற்கு பிறகு நான் தற்காலிக பணிஇடை நீக்கம் செய்யபட்டு இருந்தேன் என்றால் சரிதான், அது வேறு ஒரு வழக்கிற்காக ஆகும். அந்த வழக்கு லஞ்ச வழக்கு சம்பந்தமானது என்றால் அது பொய்யான வழக்கு. அது குறித்து விசாரணை இன்னும் நடைபெறுகிறது. நான் ஆய்வுக்கு சென்ற மருத்துவமனை முழுநேர இயங்கு மருத்துவமனையாக என்று விசாரித்து தொிந்து கொண்டேனா என்றால் அந்த பெண்மணி மாடியில் குடியிருந்து வருவதால் அழைக்கும் போது கீழ் இறங்கி வருவதை தொிந்து கொண்டேன்.

மேற்படி மருத்துவமனையில் மருத்துவர் பெயர் குறிப்பிட்டு தெரிவிக்கப்பட்ட பெயர் பலகை இருந்ததா என்றால் முன்னால் இணை இயக்குநராக இருந்த மருத்துவர். திரு. தங்கராஜ் என்பவர் பெயர் பலகை இருந்தது. அக்ஷயா என்ற பெயர் பலகை இருந்ததா என்றால் அதை நான் கவனிக்கவில்லை. நான் இரவு ஆய்வு

செய்ததற்கு தனிபட்ட காரணம் இருந்ததா என்றால் எனது பணி நேரம் முடிந்த பிறகும், அந்த மருத்துவர் எப்போது இருப்பார் என்று தெரிந்து கொண்டு ஆய்வுக்கு சென்றேன்.

நான் ஆய்வுக்கு சென்ற மருத்துனையில் மருத்துவர் மாலை இருப்பார் என்று யாரிடம் விசாரித்து தெரிந்து கொண்டேன் என்றால் நான் மருத்துவர் என்பதால் பொதுவாக மருத்துவர் மாலையில் இருப்பார் என்ற யூகத்தின் அடிப்படையில் தான் சென்றேன். நான் மருத்துவமனைக்கு சென்ற போது சிகிச்சைக்கு யாரும் இருந்தார்களா என்றால் அங்கு பணிபுரியும் ஒன்று அல்லது இரண்டு நபர்கள் இருந்து இருப்பார்கள். நான் சென்ற போது நோயாளி இருந்தார்களா என்றால் எனக்கு தெரியாது. நான் ஆய்வுக்கு சென்ற மருத்துவமனையில் இரண்டு பக்கமும் வீடுகள் இருந்தது என்றால் சரிதான். நான் ஆய்வுக்கு எனது அலுவலக இனோவா காரில் சென்றேன். அந்த காரை என் அலுவலக ஒட்டுநர் ஒட்டினார்.

காரை 50 துாரத்தில் காவல்நிலையத்திற்கு செல்லும் பாதையில் நிறுத்திவிட்டு சென்றோம். நான் பெண்ணை காவல்நிலையத்திற்கு அழைத்து செல்லும் போது உடன் பெண் உதவியாளர்கள் உடன் அழைத்து செல்ல தோணவில்லையா என்றால் அந்த பெண்மணி அவர் மகனுடன் வேறு ஒரு காரில் காவல்நிலையத்திற்கு வந்தார்கள். நான் காவல்நிலையத்திற்கு செல்லும் போது ஆய்வாளரும், உதவி ஆய்வாளரும் இருந்தார்கள். மேற்படி நான் ஆய்வு செய்த மருந்துகள் எதில் காவல்நிலையத்திற்கு எடுத்து சென்றேன் என்றால் ஒரு பிளாட்ஸ் பையில் எடுத்து சென்றேன், அங்கு போலீசார் ஆய்வு செய்து ஒரு அட்டை பெட்டியில் வைத்தார்கள்.

நான் காவல்நிலையத்திற்கு சென்ற முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து நான் கிளம்பும் போது சுமார் 10 மணி இருக்கும். நான் சம்பவ இடத்திற்கு நேராக காவல்நிலையத்திற்கு சென்றேன். நான் காவல்நிலையத்திற்கு சென்ற பிறகு வழக்கு பதிவு செய்யும் வரை காவல்நிலையத்தில் தான் இருந்தேன். புகார் மனுவை நாங்கள் தான் எழுதி கொடுத்தோம். நான் முதல் தகவல் அறிக்கை பெற்று காவல்நிலையத்தில் இருந்து சென்ற பிறகு போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரிதான். ஆனால் காவல்நிலையத்தில் அன்றைய தினம் விசாரணை செய்தார். நான் சொன்ன தேதி, சொன்ன நாளில் நான் சம்பவ இடத்திற்கு நான் ஆய்வுக்கு செல்லவில்லை என்றும், அங்கு நோயாளி போல மருத்துவரிடம் சென்றதாக சொல்வது உண்மை அல்ல என்றும், சொன்னால் சரியல்ல.

மூலைக்கரைபட்டியில் தனியார் மருத்துவமனை நிறைய உள்ளது என்றும், மருத்துவர் தங்கராஜ் நடத்தி வரும் மக்கள் நல மருத்துவமனையில் பொதுமக்கள் அதிகமாக வருவதால் தொழில் போட்டியின் காரணமாக பொய்யாக தகவல் கொடுக்கபட்டது என்று சொன்னால் சரியல்ல. மேற்படி மருத்துவர் தங்கராஜ் நான் விசாரணை செய்து இருந்தால் உண்மை நிலவரம் தெரியவந்து இருக்கும் என்றால் நான் ஆய்வுக்கு சென்ற போது மருத்துவர் தங்கராஜ் அங்கு இல்லை. மேற்படி மருத்துவர் தங்கராஜ் எனது பணியில் மூத்த மருத்துவர் என்ற முறையில் நான் அவரை தொடர்பு கொண்டு விசாரணை செய்தேனா என்றால் அந்த சமயத்தில் விசாரணை செய்யவில்லை.

நான் மேற்படி மக்கள் நல மருத்துவமனை குறித்து புகார் வருவதால் மேற்படி மருத்துவமனையில் இருந்து என்னை பார்க்க நான் வர சொன்னேன் என்றால் இல்லை. நான் மருந்துகள் மற்றும் புகாரை தயார் செய்து காவல்நிலையத்திற்கு சென்று எதிரியை மருத்துவமனைக்கு வர சொல்லி எதிரி மீது பொய்யாக பதிவு செய்யபட்டது என்று சொன்னால் சரியல்ல. எதிரி சம்பவ பகுதியில் மக்கள் நல பணி நிறைய செய்வார் என்றும், அவர் மூலம் அறிமுகம் ஆன மக்கள் மக்கள் நல மருத்துவமனைக்கு வருவார்கள் என்றால் அதுபற்றி தெரியாது.

மக்கள் நல மருத்துவமனையில் எதிரி ஒரு துப்புரவு பணியாளராக பணியாற்றி வந்தார் என்றும், மேற்படி மருத்துவமனையில் இருந்து அவரை பணியில் இருந்து எடுப்பதற்காக திட்டமிட்டு ஒரு பொய்யான புகார் கொடுத்துள்ளேன் என்றும், சொன்னால் சரியல்ல. நான் சொல்வது போல எதிரி என்னை ஆய்வு செய்யவில்லை என்றும், நான் மக்கள் நல மருத்துவமனைக்கு ஆய்வுக்கு செல்லவில்லை என்றும், பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றும், சொன்னால் சரியல்ல. நான் மருத்துவமனையில் எந்த பொருட்களையும் கைபற்றவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் ஆய்வுக்கு சென்ற போது என்னுடைய கைபேசியில் கேமரா பதிவு செய்யும் வசதி இருந்தது, ஆனால் நான் பதிவு செய்யவில்லை.